வெட்டாற்றின் குறுக்கே பாலம்

*** 703. வினா— திரு வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொரடாச்சேரி அருகில் உள்ள வேடம்பூர் கிராமத்தையும், அரவங்குடி கிராமத்தையும் இணைக்கும் வகையில் வெட்டாற்றில் ஒரு புதிய பாலம் கட்ட தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம், எனில், இதற்கான மதிப்பீட்டு பட்டியல் தொகை எவ்வளவு ?

(உ) இத்திட்டம் எப்போது செயல்படத் துவங்கும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) 7·50 இலட்சங்கள்.

(உ) பாலம் கட்டும் வேலை தற்போது ஆரம்பமாகிவிட்டது.

திரு வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டுவதால், கொரடாச்சேரி, குடவாசல் வலங்கிமான் போன்ற இடங்கள் பயன் அடையும். ரயில்வே ஸ்டேஷனுக்கு சரக்குகளைக் கொண்டு போக சுலபமாக இருக்கும். ஆகவே, வேலையைத் துரிதமாக முடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அப்படிப்பட்ட நன்மைகள் கிடைக்கும் என்பதால்தான் பாலம் கட்டும் வேலை நடக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், அதே போன்று பாலங்கள் கட்டி முடிந்ததற்குப் பின்னால், இதற்காகும் செலவுகளை அதிலே போக்குவரத்துக்களிடமிருந்து வசூலிக்கப் படுகிறதனால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ, நோ, அடுத்த கேள்வி.

பாம்பாற்றின் குறுக்கே பாலங்கள்.

*** 704 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள, அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் 1967–68, 1968–69-ல் பாம்பாற்றின் குறுக்கே பாலங்கள் கட்ட வேண்டிய இன்றியமையாமை குறித்து அரசுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளதா?

இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Bus stand at Panruti

*** 705 *Q.*—Thiru S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the action taken by Government to complete the construction of the bus stand at Panruti ?**